Registered as a NewsPaper in Sri Lanka பக்கங்கள் : 04 விலை ரூபா: 4.50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் : 02 ஏப்ரல் (02 - 04 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 43

## உணவு முத்திரைக்கான பொருள்கள் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும வழங்கப்பட்டு வந்த உணவு முத்திரைக்கு பொருள்கள் வழங்குவது கடந்த 31ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. வழங்கப்பட்டிருந்த பன்னிரண்டாம் இலக்கம் வரையான உணவு முத்திரை கடந்த மார்கழி மாதம் வரையுமே வழங்கப்பட்டிருந்தது. போதியளவு உணவுப் பொருட்கள் வந்து சேராததை (4ஆம் பக்கம் பார்க்க)

புலிகளால் கைப்பற்றப்பட்ட

# படையினர் சடலங்கள்

# இன்று கையளிப்பு

## விசேட கப்பலில கொழும்பு செல்லும்

(யாழ்ப்பாணம்)

மன்னார் வேப்பங்குள மோதலில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப் பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் இருபத்தி மூன்று சடலங்களும் இன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக சிறிலங்கா அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக இன்றுகாலை 8 00 மணியளவில் செஞ்சிலுவைச்சங்கத்திடம் இந்த இருபத்திமூன்று சடலங்களும் ஒப்படைக்கப்படும் எனத் தெரிய வருகின்றது.

இந்தச் சடலங்களை புலிகளிடம் இருந்து பொறுப்பேற்கும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் மாலை 2-00 மணியளவில் பருத்தித்துறைக்கு வரும் விசேட கப்பலில் இந்தச் சடலங்களை ஒப்படைப்பார்கள் எனவும் தெரியவருகின்றது.

### அடையாள அட்டைகளை புதுப்பிக்கவும்

(கொழும்பு)

1972, 1973 ஆம் ஆண்டுகளில் அடையாள அட்டைகளை பெற்றவர்கள் அவற்றைப் புதுப்பிக்க வேண்டுமென்று ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

### வீரவணக்கம்

#### ஜெகநாதன்

மாவிட்டபுரத்தில் கடந்த வியாழன்று சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் காயமடைந்த போராளிகளுக்கு முதலுதவிச் சிகிச்சையளித்துக் கொண்டிருந்த விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த வேலாயுதம் ஜெகநாதன் (பன்னாலை) என்ற முழுநேர ஆதரவாளர் இராணுவத்தின் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மட்டக்களப்பில் 12 தமிழர் வெட்டியும் சுட்டும் கொலை

(லண்டன்)


மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்னிரண்டு தமிழர்கள் வெட்டியும், சுட்டும், கொலைப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு கிராமத்தைச் சுற்றி வளைத்த பொலிஸ் படையினர் பலரைக் கைது செய்ததாகவும், அதில் பன்னிரண்டு (4ஆம் பக்கம் பார்க்க.)

### பொலிஸார் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

சிறிலங்கா பொலிஸ் படையைச்சேர்ந்த ஒருவர் மட்டக் (4ஆம் பக்கம் பார்க்க)



கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வேப்பங்குள மோதலில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் உடல்கள் சிலவற்றையும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும் படத்தில் காணலாம்.

ஆயுதங்களையும் சடலங்களையும் பார்வையிட

## பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்தனர்

(யாழ்ப்பாணம்)

மன்னார் வேப்பங்குளம் பகுதியில் தாக்கி கைப்பற்றப்பட்ட இருபத்திமூன்று இராணுவத்தினரின் உடல்களும் ஆயுதங்களும் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி யாழ். முத்திரைச்சந்தையில் நேற்று காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

காலை ஏழுமணியிலிருந்து மாலை மூன்று மணி வரை இந்த உடல்களையும் ஆயுதங்களையும் பெருந்தொகையான மக்கள் வரிசையில் நின்று பார்வையிட்டனர்.

இக் காட்சியில் இராணுவத்தின் உடல்கள் ஒரு கொட்டகையிலும் மற்றொரு கொட்டகையில் ஆயுதங்களும் வைக்கப்பட்டிருந்தன. இருபத்தி மூன்று உடல்களும் பெட்டிகளில் வைக்கப்பட்டு நிரையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

ஆயுதங்களின் ரவைகள் மட்டும் இரண்டு தேயிலைப் பெட்டிகளில் நிரப்பிவைக்கப் பட்டிருந்தது.

மேலும் அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களின் பெயர்களும் இத்தாக்குதலில் வீரமரணமடைந்த (4ஆம் பக்கம் பார்க்க)

## இரு அதிகாரிகள் உட்பட 25 இராணுவத்தினர் பலி

சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

வேப்பங்குளம் பகுதியில் கடந்த சனிக்கிழமை விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் இரு இராணுவ அதிகாரிகள் உட்பட குறைந்தது 25 இராணுவத்தினர் இறந்ததாக சிறிலங்கா (4 ஆம் பக்கம் பார்க்க)

வேப்பங்குள மோதலில்

## வீர மரணமடைந்த 12 போராளிகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் கஜுவத்தை இராணுவமுகாம் இராணுவத்தினருடன் வேப்பங்குளத்தில் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் பன்னிரண்டு போராளிகள் வீரமரணமடைந்துள்ளார்கள். அவர்களின் விபரம் வருமாறு:

லெப். ஜான் (செபமாலை ரொன்வி பெர்னாந்து, இலாவத்தை, முள்ளைத்தீவு), லெப். அருண் (கறுப்பையா நித்தியா (4ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் நேற்று 3 மணிநேர கடும் மோதல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் இருந்து சின்னமூளாய், பொன்னாச்சி கடைப் பக்கமாக முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவத்தரப்பில் பலத்தசேதமேற்பட்டது.

நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு ஊர்காவற்றுறையிலிருந்து சின்னமூளாய் பொன்னாச்சி கடைப்பக்கமாக வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் (4ஆம் பக்கம் பார்க்க)

# முத்தமிழ் விழா ஏப்ரல் முதல் 15 வரை

## தேவை

பாவித்த சம்போ, ஒடிக்க லோன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா பேனா பொயின்ட் பேனா. சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும். எஸ். சத்தியன், 55, மணிக் கூட்டு வீதி. கொழும்பு த்துறை பேர் பின்புறம், யாழ்ப் பாணம். (B 2169)

## பழைய புத்தக விற்பனை நிலையம்

பழைய புத்தகங்கள், கொப்பிகள் பேப்பர் போத் தல் செம்பு பித்தளை கோழித்தீவ சிமெந்து உறை கள் உரப்பைகள் வாங்கப் படும், விற்கப்படும். சேனாதி ராசா பழைய புத்தக விற் பனை நிலையம், 57 ஸ்ரான்லி றோட் (இலங்கை வங்கி முன் னேன்) யாழ்ப்பாணம். (B 2301)

## இல்ல விளையாட்டுப் போட்டி

(மீசாலை)

யாழ். மீசாலை விக்னேஸ் வர மகாவித்தியாலய வருடாந்த மெய்வல்லுனர்போட்டி கடந்தவாரம் அக்கல்லூரி மைதானத்தில் அதிபர் செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இதன் பிரதம விருந்தினராக தென்மராட்சி கோட்ட உதவிக் கல்விப்பணிப் பாளர் இ. சிவானந்தன் கலந்து கொண்டார்.

இப்போட்டியில் பச்சை இல் லம் முதலாம் இடத்தையும் மஞ்சள் இல்லம் இரண்டாம் இடத்தையும் சிவப்பு இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற் றுக் கொண்டன. (ச)

## கல்வி வளர்ச்சிக் கழகம்

(செ. த. மை)

கல்வி வளர்ச்சியில் பின்தங்கியுள்ள எழுதுமட்டுவாள் - இள விப்பகுதியிலுள்ள மாண வர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள விடுதலைப்புலி கள் மக்கள் முன்னணி கிரா மியப் பொறுப்பாளர் திரு. ஜெயா, கல்வி வளர்ச்சிக்கழ கம் ஒன்றை ஆரம்பித்துள் ளார்.

மாவீரர் திலீபன் ஞாபகார்த் தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கல்வி வளர்ச்சிக் கழகத்தில் எந்த வித ஊதியமும் பெறா மல் பல ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பதற்கு முன்வந்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.


## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

91 Dec.

O/L DAY CLASSES

(8-30 – 1-30)

ஆரம்பமாகிவிட்டது (21—03—1991)

ஆண்டு 6, 7, 8, 9, 10 ஆம் வகுப்புக்கள்

ஆரம்பம்: 3. 4. 1991

மு. குறிப்பு:
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.

(B-2321)



## முக்கிய அறிவித்தல்

கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனமாக விளங்கும்

BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தற்போது

# பாரதிதாசன் கல்வி நிறுவனம்

"அறிஞர் தம் இதய ஓடை ஆழநீர் தன்னை மொண்டு செறிகரும் மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றிப் புதியதோர் உலகம் செய்வோம்"

எனப் பெயர் மாற்றம் பெற்று தனித்துவம் வாய்ந்த அதே விரிவுரையாளர் குழுவுடன் இயங்குகின்றது.

- A/L 92 வார இறுதி வகுப்பு
- A/L 91 பகல் நேர வகுப்பு

ஆகிய புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன மாணவர்கள் தமது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.

சித்திரையில் முத்திரை பதித்திட்ட முத்தமிழ் விழா சிறப்புற நடைபெற வாழ்த்தும்

நிறுவன இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(B/ 2308)


## 6ஆம் மாத நினைவுத் தீபம்

| தாயின் மடியில் | | தாயக விடிவில் |
|---|---|---|
| 25 |  | 25 |
| - | | - |
| 08 | | 09 |
| - | | - |
| 1973 | | 1990 |

### சிவசுப்பிரமணியம் ஜனார்த்தனன்
(தவக்குமார்)

தமிழ் மண்ணில் ஜனனம் காண
ஜனித்த எங்கள் செல்வம் — ஜனாவே
தமிழ்த் தாயின் தவக்குமாரா!
தாயகம் மீட்க புறப்பட்ட வெண்புறாவே
வளமார்ந்த வன்னியின் பாவற்குளத்தில்
சிறிலங்கா படையோடு நேரமோதி
மாசற்ற மழலை முகம்
மண்மீது சாய்ந்தாலும்
மறவர் குலவீரா! — எம் மண்ணில்
நீ கோழையாய் மாயவில்லை
பெற்ற அன்னை நினை ஏந்தினாள்
துச்சமென இல்வாழ்வை
துறந்துவிட்டுச் சென்றவனே
அழியவில்லை நின் பாதச்சுவடுகள்
அவை அழியாத முத்திரைகள்
அன்புச் செல்வமே நின் ஆன்மா சாந்திபெற்றே
மீண்டும் எம்மண்ணில்
மழலையாய் தவழ்ந்திடுவாய்
உன் தாயின் கண்ணீரும் — உயிரினும் மேலான
தமிழ்த்தாயின் கண்ணீரும்
வற்றுவது எந்நாளோ
வந்தே நீ பதில் சொல்வாய்!

இவருடன் வீரமரணமடைந்த சக போராளிகள் கோபிநாத், பரதன் ஆகிய இருவருக்கும் எமது நினைவுத் துளிகள்.
சக போராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
ஜனார்த்தனன் வீதி, அப்பா, அம்மா, அண்ணா,
ஏழாலை வடக்கு, மற்றும் உற்றார்,
ஏழாலை. உறவினர், நண்பர்கள்

(B-2203)


# A/L 91 DAY CLASSES

ஆரம்பம்: 05.04 1991 (காலை 8 மணி)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(B-2304)


# நினைவு கூருகின்றோம்

## 1991 - 04 - 02



கப்டன் முரளி

க. சிறீகரன்
வல்வெட்டித்துறை

1986ஆம் ஆண்டு இத்தினத்தில் யாழ்கண்டி வீதி 18ஆம் போரில் சிறிலங்கா இராணுவ வண்டித் தொடர் மீதான தாக்குதலின்போது வீரமரணமடைந்த

**2ஆம் லெப். வதனன்** (சபாபதி-சிவபாலன்-வாரிக்குட்டியூர்)

**பெஞ்சமின்** (கனகையா பாலசுந்தரம் ஒதியமலை)

**ஜோண்** (லெபோனாட்ஜெறிமி மொறாயஸ் வங்காலை)

**மோகன்** (யாக்கோப் தற்குணம் அலெக்ஸ்சாண்டர் தோட்டவெளி)

1987ஆம் ஆண்டு வல்வை மயிலியதனை மினிமுகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்த

**கப்டன் முரளி** (கந்தசாமிசிறீகரன், வல்வெட்டித் துறை)

**லெப். பாபு** (செல்வநாயகம்ரவீந்திரன், வல்வெட் டித்துறை)

**2ஆம் லெப். ஜஸ்ரின்** (யோசப் தனசீலன் மைக்கல் அன்ரனி தலைமன்னார்)

**2ஆம் லெப். மார்ஷல்** (விக்கினராசா சந் திரவேல் முழங்காவில்)

**2ஆம் லெப். சேவியர்** (தனசீலன் வெற்றி லைக்கேணி)

**விந்தன்** (பூபாலசுந்தரம் ஞானகுரு, வல்வெட்டித் துறை)

**சிவா** (சின்னத்தம்பி சிவதாஸ் கரவெட்டி)

**பாலச்சந்தர்** (ஞானசேகரன் லக்ஸ்மீகரன் முள்ளி யான் வெற்றிலைக்கேணி)

**விடுதலை** (ஜோண் பொஸ்கோ யோகிநாதன்- தாளையடி)

**சங்கர்** (கந்தப்பு சூரியகுமார் - கரவெட்டி)

1988ஆம் ஆண்டு தாவடியில் தேசவிரோத சக்திகளுடனான மோதலின் போது வீரமரணமடைந்த

**லிங்கன்** (நல்லதம்பி அன்ரனி வாழைச்சேனை)

1989ஆம் ஆண்டு கட்டைபறிச்சானில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**கப்டன் சத்தியன்** (புண்ணியமூர்த்தி சத்திய மூர்த்தி தம்பலகாமம் திருகோணமலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2188)

## ❋ சிந்தனைக்கு ❋

ஆட்சி என்பது வெறும் அறிவுரை மட்டுமல்ல;
தன் சட்டங்களைச் செயல்படுத்தும்
அதிகாரமே ஆட்சி

— ஜார்ஜ் வாஷிங்டன்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 02-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# எல்லோரும் இந்நாட்டின் 'ஜனாதிபதிகள்'

''விரைவில் நாடு பூராகவும் கிராமியக் குடியரசுகள் நிறுவப்படும். ஒற்றையாட்சி முறையின் கீழ் அமைக்கப்படும் இக் குடியரசுகளுக்கு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் அமைச்சரவையும் இருக்கும். இந்தக் குடியரசுகள் நிறுவப்பட்டால் கொழும்பில் பணிபுரியும் ஜனாதிபதி, பிரதமர் அமைச்சர்களுக்கான போட்டி குறைந்துவிடும்'' என சிறிலங்கா ஜனாதிபதி பொலநறுவையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

எல்லோரையும் இந்நாட்டு 'மன்னர்கள்' ஆக்கிவிட வேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதியின் துடிப்பு வரவேற்கத்தக்கது அதேவேளை, கொழும்பு அரசியலில் சகலரையும் தலையிடவிட்டு தான் சிரமத்தை எதிர்நோக்குவதை தவிர்க்க 'கிராமக் குடியரசுகள்' அவருக்கும் உதவும்.

ஆனால், எல்லோரையும் ஜனாதிபதியாகவும், அமைச்சர்களாகவும் ஆக்கிவிட்டால் பிரச்சினைகள் யாவும் தீர்ந்துபோய்விடும் என்பதில்லை. கிராமக் குடியரசுகள் யாவும் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் செயற்படும் என்ற ஜனாதிபதி பிரேமதாசாவின கூற்றே அதிகாரம் அற்ற ஜனாதிபதிகளும், அமைச்சர்களும் உருவாக்கப்படுவார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டுபவையாகும்.

மத்தியில் இருந்து அதிகாரங்கள் வழங்கப்படாமல் கிராமக் குடியரசுகள் என்ன; வட்டாரத்திற்கொரு குடியரசுகள் நிறுவப்படினும் எதுவித பலனும் ஏற்படப் போவதில்லை. தமிழ் மக்கள் எவ்வளவோ இரத்தம் சிந்திய பின்னும், இந்தியாவின் வற்புறுத்தலின் பேரிலும் மாகாணசபை அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இம் மாகாண சபைக்கு சட்டரீதியாக வழங்கப்பட்ட அதிகாரங்களே மிகச் சொற்பம். இவை தமிழ் மக்களின் கோரிக்கை எதையும் நிறைவு செய்யாததனால் தமிழ் மக்களினால் நிராகரிக்கப்பட்டும்விட்டன.

ஆனால், தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக உருவாக்கப்பட்ட மாகாணசபைகள் இன்று தென்னிலங்கைப் பகுதியில் இயங்குகின்றன. முதலமைச்சர்கள், அமைச்சர்கள் பலர் இருக்கின்றனர். இம்மாகாணசபைகளில் முழுமையாக ஐக்கிய தேசியக் கட்சியினரே ஆட்சியில் உள்ளனர். இம் முதலமைச்சர்களே இன்று மாகாணசபை எந்தவித உரிமைகள் அற்றதாகவுள்ளது எனத் தெரிவித்துள்ளனர்,

மாகாணசபை நிறுவப்பட்ட பின்னரும் மத்திய அரசாங்கம் முதலமைச்சர்களுக்குத் தெரியாமல் பெரும்பாலான பணிப்புரைகளை அரசாங்க அதிபர்களுக்கு ஊடாகவே நிறைவேற்றுகின்றது. பல அமைச்சுக்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பிரித்து வழங்கத் தவறியுள்ளன. அத்தோடு மாகாணசபைக்கு உட்பட்ட அதிகாரங்களிலும் மத்திய அரசாங்க அமைச்சுக்களின் அதிகாரிகள் தலையிடுகின்றனர். மாகாணசபையினருக்குத் தெரியாமலே அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுகின்றார்கள். மேலும் மாகாணசபைகளுக்கு பொலிஸ் கமிஷன் அதிகாரங்கள் வழங்க 13 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்தில் உரிமைகள் வழங்கப்பட்டிருந்தும் அவை இன்றும் வழங்கப்படவில்லை. இவ்வாறான சில குற்றச்சாட்டுகள் ஐக்கிய தேசியக் கட்சி முதலமைச்சர்களினால் வைக்கப்படுபவையாகும்.

இவ்வாறாக மாகாண சபைகள் அதிகாரங்கள் அற்ற உள்ளூராட்சிச் சபைகளைப்போல் இயங்கிக் கொண்டிருக்கையில் கிராமக் குடியரசுகளின் மூலம் ஜனாதிபதிகளையும், முதலமைச்சர்களையும் நாட்டில் பல்கிப் பெருகச் செய்வதன் மூலம் நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகள் எவற்றையும் தீர்க்க முடியாது. கடந்த காலத்தில் ஆட்சிக்கு வரும் கட்சிகள் சமாதான நீதவான்களை நாட்டில் மிதமிஞ்சி உருவாக்கியது போல் இவர்களையும் பெருக்கிவிடலாமே ஒழிய பலன் ஏதும் இல்லை.

இன்று பிரச்சினைகளுக்குத் தீர்வு அதிகாரப் பரவலாக்கலே ஒழிய பட்டங்கள் அல்ல. பட்டங்களைக் கண்டு உரிமைகளைக் கைவிட்ட தலைமுறையினர் வாழ்ந்த காலங்கள் கடந்து பல தசாப்தங்கள் சென்றுவிட்டன.

# யாழ்.பல்கலை.விவசாயபீட பீடாதிபதி
# பேராசிரியர் அமரர் சோ. கந்தையா

அமரர் பேராசிரியர் சோமசுந்தரம் கந்தையா அவர்கள் 1936 ஆம் ஆண்டு செப்டெம்பர் 09 ஆம் திகதி பிறந்தார். யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்ற கந்தையா அவர்கள். 1958 இல் கொழும்பிலே அமைந்த இலங்கைப் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்று, விஞ்ஞான பீடத்தில் தாவரவியல் துறையில் சிறப்புக் கல்வி கற்று 1962 இல் சிறப்பு விஞ்ஞானமாணி 2ஆம் வகுப்பில் விசேட சித்தி பெற்று வெளியேறினார்.

1967 - 1970 ஆகிய காலப் பகுதியில் மேற்பட்டப்படிப்பினைத் தொடர்வதற்காக இலண்டன் சென்றார். அங்கு இலண்டன் பல்கலைக்கழகத்தின் 'வெய் கல்லூரியில்' 'தாவர இயக்கியல்' தொடர்பாக ஆராய்ச்சியிலீடுபட்டு, அவ்வாய்வின் பேறாகக் கலாநிதிப் பட்டமும் பெற்றார்.

கலாநிதி கந்தையா அவர்கள் 1964 - 1979 வரையிலான காலப்பகுதியில் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தில் 'ஆய்வு அலுவலர்' ஆகக் கடமையாற்றியுள்ளார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் தன்னை 1979 இல் இணைத்துக்கொண்டார். இப்பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக 01-02-1979 இல் சேர்ந்து 01-02-1987 இல் இணைப்பேராசிரியராக பதவி உயர்வு பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புதிய விவசாயபீடத்தின் பயிர்ச்செய்கைத் துறையின் பேராசிரியராக 02-05-1990 இல் நியமனம் பெற்றார். விவசாயபீடம் இயங்கத்தொடங்கியதும். அப்பீடத்தின் முதற் பீடாதிபதியாக நியமனம் பெற்ற பேராசிரியர் கந்தையா அவர்கள் அப்பீடத்தின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்து வந்தார். கிளிநொச்சி விவசாய பீடத்திற்கும் யாழ். பல்கலைக்கழகத்திற்குமிடையிலான இணைப்பு சேவைகளில் அவர் துவிச்சக்கர வண்டியில் அடிக்கடி பிரயாணம் செய்தார். இறுதியாக 23-03-1991 இல் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து கிளிநொச்சிக்குப் பயணம் செய்துகொண்டிருந்தபோதே மரணதேவன் எமது பேராசிரியரை அரவணைத்துக்கொண்டான்.

பேராசிரியர் கந்தையா மிகச் சிறந்த ஓர் ஆசிரியர் ஆவார்; மாணவர்களால் அவர் மிகவும் விரும்பப்பட்டார். அவர் விஞ்ஞானபீடத்தில் கடமை ஆற்றிய காலங்களில் பல்கலைக்கழகத்தின் நன்மை கருதிய பல்வேறு நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். தாவரவியல் துறைத் தலைவராகவும் விஞ்ஞானபீட மாணவர் மன்றத்தின் பெரும் பொருளாளராகவும், விஞ்ஞானபீட ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும், 'விஞ்ஞானம்' என்ற ஆய்வுச் சஞ்சிகையின் பதிப்பாசிரியராகவும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார்.

பேராசிரியர் கந்தையா அவர்கள் மிக ஆர்வத்துடன் ஆய்வுத்துறைகளிலீடுபட்டதோடு, இவரது மேற்பார்வையின் கீழ் பல மேற்பட்டப்படிப்பு ஆராய்ச்சி மாணவர்கள் தமது ஆராய்ச்சியை நடாத்தியுள்ளனர். இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவ்வாராய்ச்சிகளின் கண்டுபிடிப்புக்கள் குறிப்பாக வடஇலங்கை விவசாயத்துறையில் உடனடியாக மேற்கொள்ளத்தக்க விதிமுறைகளை விளக்குவதாகவும் இப்பிரதேச விவசாயத்தை விருத்தி பண்ணுவதற்குரிய வழிவகைகளைக் கூறுவனவாகவும் அமைந்தன. இவர் பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவின் ஓர் உறுப்பினராகவும் அமைந்து இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கு உழைத்துவந்திருக்கிறார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட புதிய விவசாயபீடத்தின் பல்வேறு பொறுப்புக்கள் பேராசிரியர் கந்தையா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன; விவசாயபீடத்திற்குரிய ஆய்வுகூடங்கள், பீடத்தின் உள்ளக இணைப்பு அமைப்புக்கள், கற்கைநெறிகள், பண்ணைகள் யாவற்றினதும் அமைப்புக்கும், வளர்ச்சிக்கும் பேராசிரியரே பொறுப்பாக இருந்தார். அவர் இப்புதிய பீடத்தினைக் கட்டி எழுப்புவதில் மும்முரமாக உழைத்து வந்தார். அங்கு அவர் படிப்பித்தலின் மட்டுமன்றி, வடமாநிலத்தின் தேவைக்கு ஏற்ற முறையிலான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தார். அத்தோடு விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையிலான தொடர்பு வேலைகளிலும் ஈடுபட்டிருந்தார்.

இன்று வடஇலங்கையில் நிலவும் யுத்தகாலச் சூழலில் பேராசிரியர் கந்தையா அவர்கள் அலுவலக விடயமாக யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான தூரத்தை துவிச்சக்கர வண்டியில் இரவு வேளைகளில் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கவுன்சில் கூட்டம், மூதவைக் கூட்டம் முதலியவற்றை முடித்துக்கொண்டு 23-3-91 இரவு அவர் கிளிநொச்சிக்குப் போய்க்கொண்டிருக்கும்போது நடுக்காட்டு வீதியில் மாரடைப்பால் தாக்குண்டு மரணமடைந்து வீதியில் கிடக்கவேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டது. பல்வேறுபட்ட சிரமங்களுக்கும், இன்னல்களுக்கும் மத்தியில் இயங்கிக்கொண்டிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு இவரது திடீர் இழப்பு பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. இவரது மரணம் குறிப்பாக பல்கலைக்கழக விவசாயபீடத்திற்கு மட்டுமன்றித் தமிழ்ச் சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

பெரும் எண்ணிக்கையான கல்விமான்கள் தமிழ்ப் பிரதேசத்தை விட்டு வெளியேறி உலகின் பல பாகங்களுக்கும் புகலிடம் தேடிச் சென்று சுகபோகங்களுடன் வாழ்கின்றார்கள். நாட்டுப் பற்றுடன் இங்கு தங்கியுள்ளோர் அரசாலும், மற்றும் போர்க்காலச் சூழலாலும் சொல்லொண்ணாத் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆட்பட்டு தமது கடமைகளை இனத்தின் விடிவிற்காகவும் நாட்டின் அபிவிருத்திக்காகவும் ஆற்றி வருகின்றனர்.

பேராசிரியர் கந்தையாவும், வெளிநாடுகளில் சுகபோக வாழ்வு அனுபவிப்போருடன் இணைந்து தாமும் வெளிநாடு சென்றிருக்கலாம். ஆனால் அவர் தமிழ்ச்சமூகத்தை மேம்படுத்துவதற்குத் தன்னாலான பணிகளை வழங்குவதற்காக யாழ்ப்பாணத்திலேயே இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்துக் கொண்டதாலேயே தேசப்பற்றுடைய பெருமகனானார்; மக்களுக்குச் சேவை செய்தே தன் மரணத்தைத் தேடிக்கொண்ட தமிழ் மகனைத் தமிழ்ச் சமூகம் என்றும் நினைவிற் போற்றும் என்பது திண்ணம்.

மறைந்த யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி பேராசிரியர் கந்தையா தொடர்பாக துணைவேந்தர் அ. துரைராஜா வெளியிட்ட செய்தி:

## பேராசிரியரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது

(கிளிநொச்சி)

''மறைந்த பேராசிரியர் சோ. கந்தையா மாணவர்களின் நலன் கருதி குறிப்பாகவும், தமிழ்ப் பிரதேசத்தின் வளம் கருதி சிறப்பாகவும் செயற்பட்டதன் விளைவாகவே கிளிநொச்சியில் யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் தோன்றியது'' என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் தமது இரங்கலுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இவரின் திடீர் மரணம் கிளிநொச்சி மக்களை பெருந்துயரில் ஆழ்த்திவிட்டது. என்றும் திறமைசாலிகள், இந்தப் பிரதேசத்திற்குப் பயன்படவேண்டிய மூளைசாலிகள், இந்த மண்ணிற்குப் பெருமை சேர்க்கும் அறிவியல் வித்தகர்கள் அவமே மறைந்து போவது நமது பிரதேசத்திற்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பு ஆகும் என்றும் தமது இரங்கலுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## இஸ்ரேல் பெற்றியாட்டைத் தொடர்ந்து வைத்திருக்கும்

(ஜெருசலேம்)

ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைகளுக்கு எதிராக உபயோகிப்பதற்காக இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்ட நான்கு அமெரிக்க பெற்றியாட் ஏவுகணை வாகனங்களை தொடர்ந்தும் தங்கள் நாட்டிலேயே வைத்திருக்கப்போவதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் மோஷி ஆரென்ஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இஸ்ரேல் தனது சொந்த 'எரோ' ஏவுகணை எதிர்ப்புக் கணை உற்பத்தியை விரைவுபடுத்தி வருவதாகவும் மோஷி ஆரென்ஸ் தெரிவித்தார்.

## பெற்றுக் கொள்ளவும்

குருநகரைச் சேர்ந்த சின்னத்துரை ஞானசேகரம், திருக்கோவிலைச் சேர்ந்த அருள்தாசன் மோகனதாஸ் ஆகியோரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது; உரியவர்கள் ஆதாரம் காட்டி 'ஈழநாதம்' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

# ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி அல்பேனியாவில் வெற்றி

(திறானா)

அல்பேனியாவில் நடந்து முடிந்த தேர்தலில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

ஐம்பது ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு ஜனநாயக அடிப்படையில் நடந்த முதலாவது தேர்தல் இதுவாகும். கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக கட்சி உட்படப் பல கட்சிகள் இத்தேர்தலில் போட்டியிட்டன.

140 தொகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சியும் 70 தொகுதிகளில் ஜனநாயக கட்சியும் வெற்றி பெற்றுள்ளன. இன்னும் 35 தொகுதிகளின் முடிவுகள் வெளிவரவில்லை. ஐந்து தொகுதிகளின் முடிவுகள் எதிர்வரும் ஞாயிறு வெளிவரும் எனத் தெரியவருகின்றது.

இத்தேர்தலில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரமிஸ்லியா தமது தொகுதியில் தோல்வியுற்றுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

## ட்ரக் சுவருடன் மோதியது; சுவர்இடிந்து நால்வர் காயம்

(சுதுமலை)

சுதுமலைப்பகுதியில் கடை மதிலுடன் ட்ரக் மோதியதில் கடை உரிமையாளர் உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் சுதுமலை அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள கடை ஒன்றின் முன்பாக நின்ற லொறி ஒன்றை விலத்தும் போது பாதை விலகிய ட்ரக் வண்டி ஒன்று அருகிலிருந்த கடை மதிலுடன் மோதித் தடம்புரண்டது.

இதனால் மதிலுடைந்து வீழ்ந்ததில் கடையில் இருந்த அதன் உரிமையாளர் சேதீஸ்வரன் (65 வயது) அவரது மனைவி பாக்கியம் (55வயது) பேர்த்தி செளந்தலா (8வயது) உட்படக்கடை வாசலில் நின்ற சுந்தரலிங்கம் (53 வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர்(ச)

## நான்கு தமிழர்கள் சுங்கப்பகுதியால் கைது

(கொழும்பு)

போலி பிரித்தானிய விசாவுடன் இலண்டன் செல்வதற்காக 'ஏயர்லங்கா' விமானத்தில் ஏறமுயன்ற நான்கு தமிழர்கள் சுங்க அதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பெண் ஒருவர் உட்பட நான்கு தமிழர்கள் போலி விசாக்களுடன் பிடிபட்டுள்ளனர்.

## உள்ளூராட்சிதேர்தலின்பின் இனப்பிரச்சினையில்கவனம் -பிரேமதாசா

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் நடந்துமுடிந்த பின்னர் இனப்பிரச்சினைத் தீர்விலே அரசாங்கம் முழுமையாக கவனம் செலுத்தும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார்.

மேமாதம் 11 ஆம் திகதி உள்ளூராட்சித்தேர்தல் நடந்து முடிந்தபின்னர் இனப்பிரச்சினைத் தீர்வில் முழுமையாக கவனம் செலுத்த அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது என்றும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும்முயற்சியில் ஈடுபடுவது அரசாங்கத்தின் அடுத்த முக்கிய பணியாக இருக்கும் என்றும், உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் இந்தப்பணி ஆரம்பமாகும் என்றும் பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

### இரு அதிகாரிகள்

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இம்மோதலில் 38 இராணுவத்தினர் காயமடைந்ததாக நேற்றுமுன்தினம் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

### உணவு முத்திரைக்கான

அடுத்து இவர்களுக்கான உணவுப்பொருள்கள் வழங்கப்படாதிருந்தது. பின்னர் இம்முத்திரை பங்குனி 31ஆம் திகதி வரை பயன்படுத்தலாமென பணிக்கப்பட்டிருந்த போதிலும் அதுவரை காலமும் எட்டாம் இலக்க உணவு முத்திரை வரையுமே பொருள்கள் வழங்கப்பட்டிருந்தன. இக்கால எல்லை 31ஆம் திகதியுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஏனைய நான்கு முத்திரைகளுக்கும் பொருள்கள் வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக உயர்அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளப்பட்டுள்ளதாகவும் கால எல்லை நீடிக்கப்படும் பட்சத்தில் இவற்றுக்கான பொருள்களை பொதுமக்கள் பெற்றுக் கொள்ளக்கூடியதாகஇருக்கும் எனவும் இதற்குப் பொறுப்பான அதிகாரி திருமதி இலசிதம்பரம் தெரிவித்தார்.

இதேவேளை இலவச உலர் உணவுப் பொருள்களைப் பெற்றுவரும் குடும்பத்தவர்களுக்கு உணவு முத்திரைக்குப் பொருள்கள் வழங்க வேண்டாம் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ச)

### வீர மரணமடைந்த

சந்திரசேகரன் திருவையாறு கிளிநொச்சி), லெப். ஜேசு (செபஸ்தியன் ஜோசப் அன்ரனி, முரசுமோட்டை, கிளிநொச்சி), புனிதன் (தி. விஜயன் குருக்கலூர், வவுனியா), குருசன் (க. கமலேஸ் சிலாவத்தை, முல்லைத்தீவு), நிதி (வே. பரமேஸ்வரன் கற்சிலைமடு, முல்லைத்தீவு), பைமன் (மிகையில் திவ்வியநாதன் நடுக்குடா, மன்னார்), பொன்ரோ (சந்திரன் பத்மநாதன் முருங்கன், மன்னார்), இரவி(சுப்பிரமணியம் ஜெயநேசன் முள்ளியவளை முல்லைத்தீவு), துஷான் (இஸ்டேசர் மோகனசகலி புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), கண்ணன் (மாசிலாமணி இராஜேஸ்வரன் கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு), பைரவி (நாகேந்திரன் சதீஸ்குமார் நெடுந்தீவு, யாழ்ப்பாணம்). இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### பல்லாயிரக்கணக்கில்

போராளிகளின் பெயர்களும் ஒலி பெருக்கியில் அவ்வப்போது ஒலிபரப்பப்பட்டது

மாணவர்கள் பொதுமக்கள் அலுவலர்கள் என பெருந்தொகையான பொதுமக்கள் வரிசையாக நின்று இந்த காட்சியை பார்த்துக் கொண்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. (வே)

மாலைதீவு கடற்பகுதியில்

## அத்துமீறி மீன்பிடித்த 115சிறிலங்கா மீனவர் கைது

(மாலே)

மாலைதீவுக் கடற்பகுதியில் அத்துமீறி மீன் பிடித்ததாக கடந்த மார்ச் மாதத்தில் 115 இலங்கை மீனவர்களை மாலைதீவு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

மார்ச் மாதத்தில் மாத்திரம் 115 மீனவர்களையும். அவர்களுக்குச் சொந்தமான 28 மீன்பிடிப் படகுகளையும் மாலைதீவு அதிகாரிகள் கைப்பற்றியிருப்பதாக வெளியுறவுத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமது கடலில் அந்நிய மீனவர்கள் அத்துமீறி வருவது அதிகரித்து வருவதால் அதனைத் தடுக்க மாலைதீவு அதிகாரிகள் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர் இந்திய, பங்களாதேஷ் மீனவர்களும் மாலைதீவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அரச அதிபர் கப்பல்துறை அமைச்சிற்கு

யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகப் பதவிவகித்து வந்த அன்ரன் அரியரத்தினம் கப்பல்துறை இராஜாங்க அமைச்சின் செயலாளராகப் பதவி உயர்வு பெற்று கொழும்புசெல்கிறார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பதவிக்கு விரைவில் புதியவர் ஒருவர்நியமிக்கப்பட உள்ளதாகவும் அவர் பதவி ஏற்றதும் இவர் கொழும்பு செல்வார் எனத் தெரிய வருகிறது. (ச)

## திருட்டு

(சுதுமலை)

அராலிக்கால் மேற்குப் பகுதியிலுள்ள மரவள்ளித் தோட்டமொன்றில் வேறு இடத்தில் திருடப்பட்ட வெங்காயம் கொண்டுவரப்பட்டு துப்புரவு செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளது. துப்புரவு செய்யப்பட்ட தண்டிலிருந்து பார்த்தால் கிட்டத்தட்ட 40 கிலோ வெங்காயம் திருடப்பட்டுள்ளது.

இதேநேரம் அல்வாய் மேற்கில் உள்ள திரு. ச. ஸ்ரீராமச்சந்திரன் என்பவரின் தோட்டத்தில் 26-03-91இல் அறுவடை செய்து காயவைத்த வெங்காயம் திருட்டுப் போயுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## கடந்த வாரம் இடம்பெயர்ந்த

## வலி- வடக்கு மக்களுக்கு ஒருவார நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் சிறிலங்கா இராணுவநடவடிக்கைகளினாலும், அச்சத்தினாலும் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேறி வலிகாமத்தின் பல பகுதிகளிலும் வாழும் சகல மக்களுக்கும் ஒருவாரத்திற்கான உலர் உணவுப் பொருள்களை உடனடியாக வழங்குமாறு உதவி அரசாங்க அதிபர்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த வாரம் கீரிமலை, சுருகம்பனை, சேந்தான்குளம், வசந்தபுரம், மாரீசன்கூடல், கவிது, காரைநகர் பகுதிகளிலிருந்து வெளியேறி முகாம்கள், வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள் ஆகியவற்றில் தஞ்சமடைந்திருக்கும் சகலருக்கும் இவ்வாரம் உலர் உணவுப் பொருட்கள்வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## வவுனியாவில்குண்டு வீச்சு! இருவர் பலி; ஒருவர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள தேவகுளம், சாவித்திரி கூழாங்குளம், மரக்காரம்பளை, பேயாடிகூழாங்குளம் போன்ற பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் சாவித்திரி கூழாங்குளம் பகுதியில் இரண்டு வீடுகள் சேதமுற்றன. ஏனைய குண்டுகள் வெற்றுக்காணிகளிலும், புதுக்குளம் குளக்கட்டிலும் வீழ்ந்து வெடித்துள்ளன.

நேற்றும் இவ்விமானத்தாக்குதல்கள் இப்பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விமானத்தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் பலியாகியுள்ளதாக அறிந்திருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தில் கல்மடு இராமநாதபுரத்தைச் சேர்ந்த என். ஞானப்பிரகாசம் (வயது 26) என்பவர் படுகாயமுற்ற நிலையில் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## நிலைமை சீரடைந்து வருவதால்

## பஞ்சாப்பில் தேர்தலுக்கான வாய்ப்புகள் அதிகரிப்பு

-சுபோத்கான் சகாய்

பஞ்சாப் மாநிலத்தில் நிலைமைகள் சீரடைந்து வருவதால் தேர்தல் நடத்தும் வாய்ப்பு அங்கு அதிகரித்திருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் சுபோத்கான் சகாய் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்கள் மத்தியில் பேசிய சுபோத்கான் பஞ்சாப்பிலும், ஜம்மு காஷ்மீரிலும் பதட்ட நிலைகளை குறைப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் நல்ல பலனை அளித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதே நேரம் அசாமிலும் நிலைமைகள் சீரடையும் என்றும் ஆனால் பஞ்சாப்பில் தேர்தல் நடத்தும் வாய்ப்பு அதிகம் உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

### பொலிஸார்

களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் சுட்டுக்கொலைப் பட்டதாகத் தெரிய வருகின்றது.

### மட்டக்களப்பில்

பேர் வெட்டியும், சுட்டும் கொலைப்பட்டும் வீதி ஓரத்தில் வீசப்பட்டிருந்ததாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

### ஊர்காவற்றுறை

அப்பகுதியிலிருந்து 300 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள்தாக்குதல்மேற்கொண்டனர். இம்மோதல் பிற்பகல் இரண்டு மணி வரை நீடித்தது.

இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் பலத்த சேதமேற்பட்டது. சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை. மோதல் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது ஹெலிதாக்குதலும், பீரங்கித் தாக்குதலும் இடம்பெற்றன.

## தாச்சி சுற்றுப்போட்டி

(சண்டிலிப்பாய்)

மாவிட்டபுரம் சூரியோதய விளையாட்டுக் கழகம் நடாத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டப்போட்டி புதன்கிழமை மாலை நான்கு மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த இறுதி ஆட்டத்தில் சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும், மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. இதில் வெற்றிபெறும் கழகத்திற்கு கேடயம் பரிசாக வழங்கப்படும் (ச)

## மரண அறிவித்தல்

### க. குணரத்தினக்குருக்கள்

(முன்னாள் கட்டுவன் துறட்டையிட்டி வைரவர் கோயில் அர்ச்சகர்)

மயிலிட்டி தெற்கு கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுண்டிக்குளி மருதடி எழும்பிள்ளையார் கோயில் அர்ச்சகருமான கந்தையா ஐயா குணரத்தினக் குருக்கள் காலமாகிவிட்டார். அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியக்குருக்களின் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இருபாலை கற்பகப்பிள்ளையார் கோயில் குருக்கள் வளவில் 02-04-1991 (இன்று) செவ்வாய் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகள் இருபாலை இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

குருக்கள் வளவு, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

கு. பாலசுப்பிரமணியக்குருக்கள் சுண்டிக்குளி மருதடி எழும் பிள்ளையார் கோயில் பிரதமகுரு

(R/1302)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது